# சென்னை மாநகராட்சி

28 DEC 2015
CORPORATION OF CHENNAI

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 21 இதழ் : 1105 நாள் : 23 - 12 - 2015

வ.அ.(ம).இ.ந.க.எண்.எம்1/ 14988/ 2015

**சென்னை மாநகராட்சி**
**வட்டார அலுவலகம் (மத்தியம்)**
**இயந்திர பொறியியல் துறை**

## E - Tender - மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிகளுக்கு மூடிய ஒப்பந்தப்புள்ளி மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்), இ.பொ.துறை அவர்களால் கோரப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | முன் வைப்பு தொகை (ரூ.) | ஒப்ப படிவ விலை (ரூ.) | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரின் பதிவு நிலை | ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மத்திய வட்டாரத்திற்கு உட்பட்ட காம்பேக்டர் வாகனத்திற்கு பல விதமான பழுது நீக்கும் பணிக்காக (ஒருங்கிணைத்து) (எய்ச்சர் மற்றும் லேலண்டு காம்பேக்டர் வாகனத்திற்கு) | 40 | 40,000/– | /– | வாகன உற்பத்தியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பழுது நீக்கும் நிறுவனங்கள் மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட பழுது நீக்கும் நிறுவனங்கள் | 11–01–2016 அன்று மதியம் 3.00 மணிக்கு |

1. ஒப்பப்படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் **11–01–2016 அன்று 14.00 மணி வரை** இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் **11–01–2016 அன்று 3.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **11–01–2016 அன்று 3.30 மணிக்கு மத்திய வட்டார அலுவலகத்தில்** ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும். மேலும், அசல் முன் வைப்புத்தொகை இதர ஆவணங்கள் மத்திய வட்டார இணை ஆணையர் அலுவலகத்தில் பெறப்படும்.

3. ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து வரைவு காசோலை பெற்று தனி உறையிலும், விலைப்பட்டியல் தனி உறையிலும் வைக்க வேண்டும்.

4. ஒப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கும் பொழுது பிணை வைப்புத் தொகை காசோலையின் நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்பு தொகைக்கான வரைவு காசோலை சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும். வரைவு காசோலையின் காலம் 90 நாட்களுக்கு மிகையாகமல் இருக்க வேண்டும். காசோலையை கவர்– 1ல் (Cover-1) சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஒப்பம் கோரும் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

**மேற்பார்வை பொறியாளர் (நகரமைப்பு,தி.க.மே.து.,இயந்திரம்)**